சரியாக வரவேண்டும், தவறுகள் ஏதும் ஏற்பட்டு திருத்தங்கள் தரவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது, சரியாக விசாரித்து விவரங்களைச் சொல்லவேண்டுமென்பதுதான் இந்த அரசின் நிலைமை என்பதையும் தெரிவித்து பேரவைத் தலைவர் அவர்களுடைய கருத்தை தமிழக அரசு பின் பற்ற முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

ஆ. புறக்கூடத்தில் (Lobby) குடி தண்ணீர் வசதி.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லெப்ட்ஹான்ட் ஸைடில் உள்ள வாட்டர் பைப் வேலை செய்யவில்லை. சட்ட சபைக்குள்ளேயே வேலை செய்யவில்லை என்றால் எப்படி ? ஆகவே தக்க நடவடிக்கை எடுத்து அது நன்கு வேலை செய்யும்படிச் செய்ய வேண்டும். எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் போன் சரியாக வேலை செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்ணீர், போன் என்பதெல்லாம் சாதாரண காரியங்கள், தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்—பச்சைத் தண்ணீர்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

இந்து சமய—அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980-ஐ அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.